செய்தி வெளியீடு எண்: 378 நாள்: 07.05.2010

## தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எம்ப்ளாயீஸ் யூனியன் சுமை தூக்கும் தொழிலாளர்களின் சில கோரிக்கைகள் தொடர்பாக சங்கப் பிரதிநிதிகளுடன் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.எ. வ. வேலு அவர்கள் ஆலோசனை நடத்தினார்கள்

தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எம்ப்ளாயீஸ் யூனியனின் மாநிலத் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. செ. குப்புசாமி, சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் திரு. மா. பேச்சிமுத்து, மற்றும் சங்க நிர்வாகிகள் 12.04.2010 அன்று மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்களை தலைமைச் செயலகத்தில் சந்தித்து சில கோரிக்கைகள் அடங்கிய மனுவினை அளித்தனர்.

2. அக்கோரிக்கைகள் தொடர்பாக மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் மற்றும் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மை செயலர் ஆகியோருடன் நடந்த பேச்சு வார்த்தையில் மீண்டும் 07.05.2010 அன்று தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டது.

3. இதற்கிடையில் 24.04.2010 அன்று சுமைதூக்கும் தொழிலாளர்களின் சங்கத் தேர்தல் நடைபெற்று, இத்தேர்தலில் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் (டு�ளுகு) சுமை தூக்கும் தொழிலாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட சங்கமாக தேர்வு செய்யப்பட்டது. அதனால் சுமைதூக்கும் தொழிலாளர்களின் சார்பாக தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எம்ப்ளாயீஸ் யூனியனின் மாநிலத் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. செ. குப்புசாமி, சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் திரு. மா. பேச்சிமுத்து, மற்றும் சங்க நிர்வாகிகள் இன்று (07.05.2010) பிற்பகல் 3.00 மணியளவில் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்களுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் பங்கு கொண்டனர்.

4. மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்அவர்கள் சுமைதூக்குபவர்களுடைய கோரிக்கைகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதாக தெரிவித்தார்கள். இக்கூட்டத்தில் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, முனைவர் திரு.வீர சண்முக மணி, இ.ஆ.ப., நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

வெளியீடு:– இயக்குநர்,
செய்தி மக்கள் தொடர்புத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.